Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

நீடித்த பாவனைக்கு
சொனென்ஷீன் சொனென்ஷீன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 11 அம் நாள் ஷஃபான் பிறை 20 '25 12 64' வெள்ளிக்கிழமை இதழ் 316

பதவியாவில் விமான மூலம் உணவு ★ தலைமன்னர் ரயில் சேவை நிறுத்தம் ★ பாவற்குளத்தில் குடும்பமே பலி ★ நிவாரண உதவி அளிக்கநடவடிக்கை

# 200 மீனவர்கள் 80 படகுகள் கதி என்ன?

## கடற்படையினர் தேடுதல்; இந்தியாவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

எண்பது படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற சுமார் 200 மீனவர்கள் இன்னும் திரும்பிவந்து சேரவில்லை. இவர்களைத் தேடுவதில் காரைநகரிலுள்ள கடற்படை இயந்திர மோட்டார் படகுகள் ஈடுபட்டுள்ளன. விமானங்களும் விரைவில் இந்த மீனவர்களைத் தேடப் புறப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. காணமல் போன மீனவர்களின் குடும்பத்தினர் கண்ணீர்விட்டுக் கலங்குகின்றனர்.

### முன்னாள் எம். பி. அவசர தந்தி

நெடுந்தீவு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த மீனர்கள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் மீன்பிடிக்கச் சென்றதாகவும் அவர்கள் புயலில் சிக்கியிருக்கக் கூடுமென்றும் அஞ்சப்படுகிறது. எண்பது படகுகளில் சென்ற இந்த மீனவர்களைத் தேடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதமருக்கும் மீன்பிடி மந்திரிக்கும் முன்னாள் எம். பி. திரு. க. துரைரத்தினம் அவசரத் தந்திச் செய்திகள் அனுப்பியுள்ளார். தந்தி, டெலிபோன் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டிருப்பதால் காரைநகர் கடற்படைப் பொறுப்பு அதிகாரி கமாண்டர் அல்பிரட் பெரேராவின் உதவியுடன் ரேடியோ டெலிபோன்மூலம் இந்தத்திகளை அவர் அனுப்பி வைத்துள்ளார். இந்த மீனவர்கள் தென்னிந்தியக் கரையோரப் பகுதிகளில் காற்றினால் ஒதுக்கப்பட்டிருக்கக் கூடுமென்றும் அவர்களை அங்கு தேடிக் கண்டுபிடித்து பாதுகாப்பளித்து திருப்பி அனுப்புவதற்கு இந்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்குமாறு கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷனரையும் திரு. துரைரத்தினம் தந்திமூலம் கேட்டுள்ளார். இந்திய அரசாங்கத்தின் உதவியைப் பெறுமாறு பிரதமரையும் அவர் கேட்டுள்ளார். இதற்கு அரசாங்க அதிபர் கடல்மூலமாகவும் - ஆகாயவிமான மூலமாகவும் தேடுவதாக முன்னாள் எம். பி. துரைரத்தினத்திற்கு தந்திமூலம் தெரிவித்துள்ளார்.

### காரியாதிகாரி நடவடிக்கை

நேற்று அதிகாலை திரு. துரைரத்தினம் யாழ்ப்பாணத் தலைமைக் காரியாதிகாரி திரு. த. பாலச்சந்திரனைச் சந்தித்து மீனவர்கள் காணமல் போனதுபற்றித் தெரிவித்து அவர்களைத் தேடுவதற்கான முயற்சிகளில் உதவிபுரியுமாறு கேட்டுக் கொண்டார். திரு. பாலச்சந்திரன் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரின்டனுடன் ஆலோசனை செய்தபின் காரைநகர் கடற்படைத் தளபதி திரு. பெரேராவுடனும் ஆலோசனை செய்தார். இதன்பின் ரேடியோ டெலிபோன்மூலம் கொழும்பிலுள்ள யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீராவுடன் தொடர்பு கொண்டு காணமல்போன மீனவர்களைத் தேடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

காணமற்போன மீனவர்களினதும் படகுகளினதும் எண்ணிக்கை பற்றிச் சரியான விபரம் தெரியவில்லையெனினும் சுமார் 70 படகுகளும் 200 மீனவர்களும் காணமற்போயிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

### இலவச உணவு

புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. பல இடங்களில் இலவசமாகப் பங்கீட்டரிசி வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன. புயலினால் ஏற்பட்ட சேதங்கள் கஷ்டங்கள் பற்றிய விபரங்கள் திரட்டப்பட்டுவருகின்றது.

### கடல் கொந்தளிப்பு

வடமராட்சிப் பகுதியில் மணற்காடு குடத்தனை நாகர்கோயில் மாமுனை மருதங்கேணி ஆகியவனை செம்பியன்பற்று ஆகிய இடங்களில் கடல் கொந்தளிப்பினால் கரையோரப் பகுதிகளிலுள்ள மீனவர்களின் குடிசைகள் சேதமடைந்து மக்கள் அவதிப்படுகின்றனர். இப்பகுதிகளுக்கு பருத்தித்துறை காரியாதிகாரி பனை காரியாதிகாரி முன்னாள் பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் ஆகியோர் சென்றுபார்வையிட்டனர்.

### இருவர் மரணம்

வடமராட்சி கிழக்கில் இரு கட்டிடம் இடிந்து விழுந்ததில் இருவர் மாண்டனர். பாடசாலைக் கட்டிடங்களின் கூரைகள் கோயில் கூரைகள் புயல்காற்றினால் தூக்கியெறியப்பட்டன.

---

வாசக நேயர்களுக்கு
எமது உளம் கனிந்த
நத்தார் சோபன
வாழ்த்துக்கள்

---

## சடலங்கள் மிதந்தன

யாழ்ப்பாணம், வெள்ளி

நெடுந்தீவு கிழக்கிலும் குயின்தா கோரியடியிலும் கரையோரங்களில் சடலங்கள் மிதப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் பதினைந்து பேரின் சடலங்கள் இப்படி மிதப்பதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். சில சடலங்கள் மீன் வலைகளிலும் சிக்குண்டதாக கூறப்படுகிறது.

நெடுந்தீவுக்கும் ஊர்காவற்றுறைக்கு மிடையே சேவை யாற்றிவந்த வள்ளமொன்று உடைந்ததால் ஜி. ஸி. ஈ. பரீட்சை விடைத்தாள்களும் மற்றும் குமாஸ்தாக்கள் பரீட்சை விடைத்தாள்களும் நீருடன் நீராகக் கலந்தன.

## உடனடி நிவாரண உதவிக்கு ரூ. 55,000

### சமூகசேவை இலாகா ஒதுக்கியது

யாழ்ப்பாணம், வெள்ளி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு தொடங்கி புதன்கிழமை நண்பகல்வரை வீசிய புயல்காற்று அடங்கிவிட்டது. தென்மேற்குப் பருவமழை தொடர்ந்து பெய்யலாம் என்று வானிலை அவதானநிலையம் அறிவித்தது.

### ரூபா 55,000 நிவாரணஉதவி

புயலினால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உடனடியாக நிவாரணஉதவி வழங்குவதற்கென ஐம்பத்தைந்தாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக சமூக சேவை இலாகா

(4-ம் பக்கம் பார்க்க)

## பாம்பன் பாலத்துக்கு நேர்ந்த கதி!

### தூண்கள் மட்டுமே இருக்கின்றன

சென்னை, டிச 24

கடல் கொந்தளிப்பு காரணமாக பாம்பன் ரயில் பாலம் முற்றிலும் சீர்குலைந்துவிட்டது. ரயில் பாதை, கடல் நீருடன் அள்ளப்பட்டுள்ளது. பாலத்துக்கு பதிலாக அங்கு வெறும் தூண்கள் மட்டுமே காட்சியளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### வைகை சீறுகிறது

மதுரையில் வைகை பெருக்கெடுத்துள்ளது. அபாயம் தொடர்ந்திருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3,000 பேர் பாதிப்பு

ராமேஸ்வரம் பகுதியில் 3000 பேர் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். விமானம் மூலம் மட்டுமே அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

## இராமேஸ்வரத்தில் ஒரு பகுதி கடலால் அள்ளப்பட்டது

### 200 பேர் மாண்டனர்

சென்னை, டிச. 24

கடல் கொந்தளிப்பு காரணமாக இராமேஸ்வரம் தீவின் ஒரு பகுதி அள்ளப்பட்டுள்ளதாகவும் இதனால் சுமார் 200 பேர்களுக்குமேல் இறந்துவிட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளதாக தமிழ் நாட்டு முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் இன்று நிருபர்களிடம் தெரிவித்தார். தனுஷ்கோடியில் கடல் கொந்தளிப்பு காரணமாக பெரும் பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதாக இராமநாதபுரம் கலெக்டர் தம்மிடம் தெரிவித்துள்ளதாகவும் திரு. பக்தவத்சலம் தெரிவித்தார்.

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அவசர உதவிகள், உணவுப் பொட்டலங்கள் முதலியனவற்றைக் கவனிக்க ஹெலிகாப்டர்களும், விமானப்படையும்

(1-ம் பக்கம் பார்க்க)

### முன்னாள் எம். பி. ஏற்பாடு

யாழ்ப்பாணம், வியாழன்

தனுஷ்கோடியில் மாண்ட 200 மீனவர்களை அவர்களின் சொந்தக்காரர்கள் பார்வையிட்டு அடையாளம் கண்டுபிடிப்பதற்காக யாழ்ப்பாணம் முன்னாள் எம். பி. அல்பிரட் துரையப்பா பாதுகாப்பு வெளிநாட்டு அமைச்சுடனும் இந்திய ஹைக்கமிஷனுடனும் தொடர்பு கொண்டுள்ளார். தங்கள் உறவினர்கள் காணாது தவிக்கும் குடும்பத்தவர்கள் பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டால் அவர்கள் தனுஷ்கோடிக்கு இறந்த மீனவர்களை அடையாளம் கண்டுபிடிப்பதற்காக அழைத்துச்செல்லப்படுவார்கள் என்றும் முன்னாள் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## மணிவாக்கு

நாளைக்காகக் கவலைப் படாதிருங்கள். நாளைய தினம் தன்னுடையவை களுக்காகக் கவலைப்படும் அந்தந்த நாளுக்கு அதனதன் பாடு போதும்.

— இயேசுநாதர் மலைப் பிரசங்கம்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 11 உ (25-12-64)

## யாழ்ப்பாணத்தில் மின்சார விநியோகம்

யாழ்ப்பாணம் இலங்கையின் இரண்டாவது பெரிய நகரம். தொழில்வளர்ச்சிக்கும், மக்களின் அன்றாடவாழ்க்கைக்கும் மின்சாரம் இப்பொழுது அத்தியாவசியத் தேவையாகியுள்ளது. புயல் வீசியதும் மரங்கள் வீழ்ந்து மின்சாரக் கம்பிகள் பல இடங்களிலும் அறுந்து தொங்கின. மக்களின் உயிரைப் பாதுகாக்குமுகமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது சரியே; புயல் ஓய்ந்துவிட்ட போதிலும் அறுந்துபோன மின்சாரக் கம்பிகளையும், சரிந்து வீழ்ந்த மின்சாரக்கம்பங்களையும் சீர்செய்து மீண்டும் மின்சாரம்விநியோகிக்கும் முயற்சிகள் இன்னமும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புயல் காற்று மட்டுமல்ல, காற்று சற்று பலமாக வீசினால்கூட யாழ்ப்பாணத்தில் மின்சார விநியோகம் தடைப்படுவதும் நகரம் இருளில் மூழ்குவதும் சாதாரண நிகழ்ச்சி. 'ஈழநாடு' பத்திரிகை, சினிமாச்சாலைகள் முதலியன பாதிக்கப்பட்டன. இனியும் இப்படி நிகழாமல் வேறு வழிவகைகளை யாழ்ப்பாண மாநகரசபை ஆராய்ந்து விசேஷ நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது மிகமிக அவசியம். மின்சாரக் கம்பங்கள் நாட்டி மின்சாரக்கம்பிகள் மூலம் மின்சாரம் விநியோகம் செய்யும் முறை பழமையானதும் விநியோகம் தடைப்படக் கூடியதுமாகும். கொழும்பு மற்றும் சில நகரங்களிலும் நிலத்தின் கீழ் 'கேபிள்கள்' எனப்படும் கம்பிகளைப் பதித்து அதன்மூலம் மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால் புயல் வீசினாலோ, மழை பொழிந்தாலோ, மரம் பெயர்ந்தாலோ மின்சார விநியோகம்தடைப்படாமலுள்ளது. அதைப்போல் நீவின் இரண்டாவது பெரிய பட்டணமான யாழ்ப்பாணத்திலும் செய்ய வேண்டியது அத்தியாவசிய நடவடிக்கையாகும், யாழ்ப்பாண மாநகரசபை இதை உடன் கவனிக்குமென்றே நம்புகிறோம்.

—

## புயலில் சிக்கிய படகுகள்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எண்பது படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களைக் காணவில்லையாம். இவர்கள் புயலில் சிக்குண்டு தென்னிந்தியக் கரையோரப் பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருக்கக் கூடும் என்று சொல்லப்படுகிறது. அவர்களைத் தேடி இலங்கைக்குப் பத்திரமாக அனுப்பி வைக்க இந்திய அரசாங்கத்தின் உதவியைப் பெறவேண்டுமென்று பிரதமருக்கும், கடற்தொழில் மந்திரிக்கும் அவசர கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

கடலில் தொழிலுக்குச் சென்றவர்கள் திரும்பிவரவில்லையெனில் அவர்களது குடும்பத்தினர் எவ்வாறு கலக்கமடைவர் என்பதை விளக்கத் தேவையில்லை.

இந்தியாவின் தெற்குக் கரையோரமும் இலங்கையின் வடக்குக் கரையோரமும் அதிக தூரத்திலில்லை. இங்கு காற்று சற்று பலமாக வீசினாலும் சரி அங்கு வீசினாலும் சரி இரு பகுதி மீனவர்களும் இந்த இரு கரைகளிலும் போய்ச் சேருவது வழக்கம். இரண்டு தினங்களுக்குமுன் இங்கு வீசிய புயல் இந்திய தென் கரையோரப் பகுதியையும் தாக்கியுள்ளது. இங்கு மீனவர்கள் பற்றிய தகவல் தெரியாதது போல் அங்குமிருக்கக் கூடும். இந்நிலையில் இரு நாட்டு அரசாங்கங்களும் பரஸ்பரம் உதவி புரியவேண்டியது அவைகளது கடமை. இங்கு அப்படி ஒதுக்கப்படுபவர்களெல்லோரையும் 'கள்ளத் தோணிகள்' என்று கருதக்கூடாது. அங்கு போய்ச் சேர்பவர்களெல்லோரும் 'கள்ளக்கடத்தல்காரர்கள்' என்று அவர்களும் நினைக்கக்கூடாது.

இலங்கையில் பெருவெள்ளம் ஏற்பட்டதும் உடனடியாக உதவிக்கு வந்த இந்திய அரசாங்கம் ஆபத்து சமயத்தில் நிச்சயம் உதவி செய்யும். இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவை அதிகரிக்கப்போவதாக இரு பிரதமர்களும் தெரிவித்துள்ளனர். இங்குள்ள இந்திய ஹைகமிஷன்மூலம் இதற்கான ஒழுங்குகள் உடன் செய்யப்படுமென்றே நம்புகிறோம்.

# வவுனியா மாவட்டத்தில்

ம் பக்கத் தொடர்ச்சி)

### குடும்பமே பலி

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளக் குடியேற்றத்திட்டத்தில் வசித்துவந்த 10 பேர் கொண்ட குடும்பம் அவர்கள் இருந்த வீட்டின்மீது பெரிய மரம் ஒன்று அடிபெயர்ந்து சரிந்து விழுந்ததினால் பலியாகிவிட்டதாக அறியப்படுகிறது. இப்பகுதியில் இன்னும் பலர் மாண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடை, உணவு போன்றவைகளும் முதலுதவி சேவையும் அளிப்பதற்கு வவுனியா மூன்றாம் எம். பி. திரு. த. சிவசிதம்பரம், வவுனியா நகரசபைத்தலைவர் திரு. எம். பொன்னையா, காரியாலய உதவியாளர்கள் உட்பட காரியாதிகாரிகள், கிராமசேவையாளர்கள், அரசாங்க இலாகா உத்தியோகத்தர்கள் ஆகியோர் அடங்கிய கோஷ்டி ஒன்று நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

### போக்குவரத்துத் தடை

மன்னார், கண்டி, கொறப்பத்தானை ஆகிய இடங்களுக்கு போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இப்பகுதி வீதிகளில் பல பெரிய மரங்கள் அடிபெயர்ந்து விழுந்துள்ளன. இம் மரங்களை வீதிகளில் இருந்து அகற்றுவதற்கு பொதுவேலைப் பகுதியினர் துரிதவேலைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதைத் தவிர வவுனியா முன்னைநாள் எம். பி. திரு. ரி. சிவசிதம்பரமும், நகரசபை அங்கத்தவர்களும் பொதுமக்களும் வீதிகளில் உள்ள மரங்களை அகற்றியவண்ணம் இருக்கின்றார்கள். முதிரை, மலை வேம்பு, தேக்கு என்னும் பல சாதிக் காட்டுமரங்கள் வேருடன் சாய்ந்துவிட்டன. இவற்றை அகற்றுவதற்கு சுமார் மூன்று நாட்களாகலாம். இவ் வீதிகளில் நடந்து செல்வதும் கஷ்டமே.

### கால் நடைகள் மாண்டன

இம்மாவட்டம் விவசாயத்திலும், கால்நடை வளர்ப்பிலும் அதிகம் நாக்கம் உள்ள இடம் எழுபத்தைந்து ஆடுகள் இறந்தன. இதைவிடப் பலரின் ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் இறந்து விட்டன. சில கால் நடைகளை காணவில்லை. வீதிகளில் கோழிகள், பசுக்கன்றுகள், மாடுகள் இறந்து கிடக்கின்றன. வவுனியாக்குளத்திலும் அதையடுத்த பள்ளத் தாக்கிலும் கோழிகளும் மாடுகளும் மிதக்கின்றன. உயிர்தப்பிய கால்நடைகளுக்கு நோய் வரலாம் என்றும் பொது மக்கள் அஞ்சுகின்றனர்.

### தஞ்சம் புகுந்துள்ள மக்கள்

வீடுகளை இழந்த பலர் வவனியா நகரசபை மண்டபத்திலும், சின்னப்புதுக்குளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பெரிய மண்டபத்திலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்து உள்ளனர். அவர்கள் உடுக்க உடையின்றி கஷ்டப்படுகின்றனர். அவர்களின் பொருட்கள் கூப்பன்கள் மற்றும் உடைகளும் காணாமல் போய் விட்டன. பல பச்சிளம் குழந்தைகள் உண்ண உணவின்றி கஷ்டப்படுகின்றார்கள். இவர்களில் பலர் உணவு வழங்க வருகின்றனர்.

### பாண் ருத்தல் 80 சதம்

இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்த சில வியாபாரிகள் உணவுப் பொருட்களின் விலைகளை இருமடங்கு அதிகரித்துள்ளனர். அரைச்சாப்பாட்டின் விலை இரண்டு ரூபாய். வவுனியா நகரத்தில் மூன்று கடைகளில்தான் இன்று உணவு கிடைத்தது. பாண் ருத்தல் விலை 80 சதம். இந்த விலைக்கும் பொதுமக்கள் கியூவில் நின்று வாங்கினர். இன்று நகரில் பலர் பட்டினியுடன உணவு கிடைக்காமல் இருந்தனர். அகதிகளுக்கு உடன் உணவு வழங்கவும் மற்றும் நிவாரணம் அளிப்பதற்கும் வவுனியா சமூகசேவைப் பகுதி உத்தியோகத்தர் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் ஒதுக்கித்தருமாறு சமூகசேவைப்பகுதியை கேட்க ஒழுங்கு செய்துள்ளனர்.

### தபால் தந்தி தொடர்பு இல்லை

இப்பகுதிக்கு தபால் தந்தித் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் வெளியூர் சென்றுள்ள வவனியா அரசாங்க அதிபருக்கு செய்தியனுப்ப முடியாமலுள்ளது. வவுனியா காரியாலய உதவியாளரும், காரியாதிகாரிகள் இருவரும்தான் அவரின் கடமையைச் செய்துவருகின்றனர்.

### வீடுகள் நாசம்

இம்மாவட்டத்தில் சுமார் 500 வீடுகள் முற்றாக அழிந்துவிட்டன. 2500 வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகின பல கடைகளின் ஓடுகள், தகரங்கள், கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

### மின்சார கம்பங்கள் வீழ்ந்தன

பு... யிலும். மழையி... வவுனியா நகரத்தில் உள்ள மின்சாரக் கம்பங்கள் விழுந்துவிட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மின்சாரப்பகுதியினரின் நடவடிக்கையால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன. புகையிரத நிலையம், நீர்ப்பாசன இலாகா, சில கடைகள், வவுனியா மருந்துக்கடை, வவுனியா ஆஸ்பத்திரி, கச்சேரி, கிறிஸ்தவ தேவாலயம், இந்துக்கோவில், பொலிஸ நிலையம், அரசாங்க உத்தியோகத்தர்கள் இருக்கும் வீடுகள் ஆதியன சேதமடைந்துள்ளன.

### இலவச உணவு

யாழ்ப்பாணம் மெயில் ரயில் வியாழக்கிழமை அதிகாலை புளியங்குளத்தை வந்தடைந்ததும் பிரயாணிகளுக்கு புகையிரத நிலயத்தில் வைத்து 2000 பார்சல் சாதம் அவ்வூர் பொது மக்களால் விநியோகிக்கப்பட்டது. தொடர்ச்சியாக முப்பது மணிநேரம் பிரயாணம் செய்த பிரயாணிகள் இதனால் சோர்வு நீங்கி மகிழ்ச்சியடைந்தனர்.

மன்னாரில் இருந்து வந்த யாழ் கிழக்கு டிப்போ பஸ ஒன்று பாதையைவிட்டு விலகியது.

### வலி மேற்கில்

புயல்காற்றினால் வலிகாமம் மேற்குப் பகுதியில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வோர் கிராமத்தவரும் தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை சங்கானையிலுள்ள காரியாதிகாரியிடம் வந்து தெரிவித்துள்ளனர்.

### சங்கானையில்

சங்கானைப் பொலிஸ நிலயத்துக்கு அருகாமையிலுள்ள ஒரு பெரிய அரசமரம் பெயர்ந்து விழுந்தது. இரண்டு பலா மரம் கிளைகள் முறிந்து சரிந்து நிற்கின்றன.

### வடலியடைப்பில்

வடலியடைப்பில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய கட்டிடக்கூரை அயல் வளவில் அப்படியே தூக்கி எறியப்பட்டுள்ளது.

### பண்டத்தரிப்பில்

பண்டத்தரிப்பு பகுதியில் கொழுந்துகள் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன. போக்குவரத்துப் பாதைகள்தென்னை பனை போன்ற மரங்கள் விழுந்து தடைப்பட்டுள்ளது.

### மாதகல்

மாதகல் கரையோரப்பகுதியிலுள்ள தென்னை மரங்கள் பெயர்ந்து விழுந்துள்ளன. குடிசைகள் சேதமடைந்துள்ளன.

### வழக்கம்பரையில்

வழக்கம்பரை அம்மன் கோவில் தீர்த்த மடம் இருந்த இடம் தெரியாமல் தரைமட்டமாகியுள்ளது. மற்றும் கோவில் கூரை ஓடுகள் தரையில் உடைந்து கிடக்கின்றன. ஆலமரங்கள் வீழ்ந்து கிடக்கின்றன.

### பண்ணாகத்தில்

பஸ இன்ஸபெக்டர் ஒருவரின் வீடு பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

### சாவகச்சேரி

படத்திற்குசென்றவர்கள்கூட திரும்பிதங்கள் வீடுசெல்ல அஞ்சினர், கடைகளில் தங்கினர் வீதிகளிலும் வீடுகளிலும் உள்ள பெரிய மரங்கள் வேரோடு சாய்ந்து விட்டன.

சாவகச்சேரியில் எஸ். எஸ். ஸி. பரீட்சை எழுதும் மாணவர்கள் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டதால், பரீட்சை நிலையத்திற்கு செல்ல மிகவும் கஷ்டப்பட்டனர். சில மாணவர்கள் தனிப்பட்ட கார்களில் வேறுபாதைகளால் பரீட்சை நிலயத்திற்குச் சென்றனர்.

## நாட்டிலும் நகரிலும்

வருகிற ஜனவரி மாதம் முதலாம்திகதி 27,000 இ.போ.ச. ஊழியர்களுக்கு தலா ரூ. 150 போனஸ் கிடைக்கப் போகிறது. பஸ போக்குவரத்து சேவையில் இந்த வருடம் கிடைத்த லாபம் இப்படிஊழியர்களிடையே பங்கீடு செய்யப்படுகிறதாம். இதுவே உண்மையான சோஷலிஸம்என்று கூறலாம். இப்படியே அரசாங்கம் எடுத்துநடத்தும் ஒவ்வொரு சேவையும் லாபமடைந்து அந்த லாபம் அந்தந்த சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பங்கீடு செய்யப்படுமாகில் ராமராஜ்யம் தானகவே வந்துவிடுகிறது. ஆனால் அரசாங்க ஸதாபனங்களிலும் அரசாங்கஉதவி பெறும் ஸதாபனங்களிலும் இ. போ. ச. வைப்போல் 4 லட்சம் ரூபா போனஸ கொடுக்க முடிகிறதா? ஒவ்வொரு ஸதாபனத்திலும் எத்தனை பீத்தல்களும் எத்தனை ஒழுக்குகளும்? கூட்டுறவு மொத்தவிற்பனை ஸதாபனத்தில் கைலஞ்சமும் ஒழுங்கீனங்களும் இன்னும் இருந்து வருகின்றன என்று மந்திரி திரு. இலங்கரத்னவே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இது ஒருபுறமிருக்க, பசு பாலைத் தருகிறது. அந்தப்பசுவைப் பார்த்து மேய்த்துக் கண்காணிப்பவனுக்கு சம்பளம் உயருகிறது. பசுவின் பாலை விற்றுவந்த லாபத்தில் ஆளுக்கும் சவறுகிறது. ஆனால் பசுவின்பாடு என்ன? அதுசுகும் ஏதாவது எள்ளுகொள்ளு என்று போடப்படாதா? இங்கே பாலைத்தரும் பசு பொதுமக்கள் அந்தப்பசுவைப் பார்த்து மேய்ப்பவர்கள் இ. போ. ச. ஊழியர்கள். ஊழியருக்குக் கிடைக்கும் சலுகையும் போனசும் பசுவுக்குக் கிடைக்கப்படாதா? நச்சுப் புகை கக்கும் பஸகள், சீட் இல்லாத பஸகள், ஒழுகும்பஸகள், நடுவழியில் சத்தியாக்கிரகம் செய்யும் பஸகள்- இவற்றைச் சீரபடுத்தி பால் தரும் பசுவுக்கும் ஏதாவது நன்மை செய்யப்படாதா?

∴ ∴ ∴

கடந்த செவ்வாய்கிழமை மாலை ஆரம்பித்து புதன் கிழமை காலை 10 மணிவரையில் அடித்த புயல்காற்றைப் போல கொடிய காற்று முன் ஒருபோதும் அடித்ததில்லை யென்று தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். வழக்கத்தில் யாழ்ப்பாணத்திலும் வடபகுதியிலும் அடிப்பது கச்சான் காற்று-அதாவது மேற்கேயிருந்து கிழக்குப்பக்கமாக அடிப்பது. அன்று அடித்த காற்று கொண்டல்-கிழக்கேயிருந்து மேற்கே அடிப்பது. சுமார் 80, 90 மைல்வேகத்தில் அடித்த அந்தக் கொண்டல் ஒவ்வொரு வீட்டிலும் மரத்தை வீழ்த்தியிருக்கிறது. வேலிகள் தாமாகவே சரிந்து விழுந்துவிட்டன. முகட்டுக் கூரைகள் ஆகாயத்தில் மிதந்தன. தந்திக் கம்பிகளும் மின்சாரக் கம்பிகளும் சில்லங் கெட்ட முறிந்து விழுந்தன, எத்தனை வீடுகளுக்குச் சேதம்! நல்ல வேளையாக இம்முறை மாரி மழை குறைந்தபடியால் நிலம் நெகிழ்ந்துபோகாமல் கெட்டியாக இருந்துவிட்டது. இல்லாவிட்டால் இன்னும் அநேகம் மரங்கள் வேரோடு சாய்ந்திருக்கும்.

பூத்துக் குலுங்கி நின்ற முருங்கை மரங்கள் எத்தனை? குலைகாய்த்து நின்ற வாழைகள் எத்தனை? எல்லாம் மரமரவென்று முறிந்து விழுந்தன, தைப்பொங்கல் அருகிவரும் இந்நாளில் வாழைப்பழத்துக்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கப் போகிறது.

கூத்துக்குள் கோமாளி என்பதுபோல இதில் இன்னுமொரு வேடிக்கை. வியாழக்கிழமை காலையில் இலங்கை வானொலியின் செய்திகளைக்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கேட்டபோது வெள்ளிக்கிழமை நண்பகல் வரையில் புயல்காற்று வடபகுதியில் அடிக்கும் என்று சொன்னார்கள்! புதன்கிழமை பகலே காற்று 'பொக்'கென்று நின்று விட்டது, வெள்ளிக்கிழமை நண்பகல்வரையில் காற்றடிக்கப்போகிறதென்று எப்படித்தான் கண்டுபிடித்தார்களோ! வானொலியில் வரும் காலநிலை அறிவிப்புகளை மீனவர்கள் கேட்டு அதன்பிரகாரம் நடக்கவேண்டுமென்பதற்காக வே வானொலியில் காலநிலை விபரங்கள் கொடுக்கப்படுகின்றன. வராத புயலைப்பற்றி வருவதாகக் கூறுவதால் பரவாயில்லை. ஆனால் வருகிற புயலைப்பற்றி முன் கூட்டி அறிவிக்காமல் விட்டால்தான் ஆபத்து.

-"வழிப்போக்கன்"

## யாழ்ப்பாண மாநகர சபை

1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை மின்சார இலாகாவிற்குத் தேவையான மின்சார உபகரணங்களும் பொருள்களும் விநியோகம் செய்வதற்கு அரக்கு முத்திரை யிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி விளம்பரம் அனுப்பப்படும் உறையின் மேற்பக்கத்தில் "மின்சார உபகரணங்களுக்கு கேள்விப்பத்திரங்கள்" என எழுதப்பட்டு இரு பிரதிகள் இணைத்து பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ந் திகதி பிற்பகல் 3-00 மணிவரை கட்டுப்பணமாக ரூபா 100/-ம் விண்ணப்பப் பத்திரத்திற்கு ரூபா 3/-ம் செலுத்திக் கேள்வி விண்ணப்பப்பத்திரங்கள் இந்தக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தம் திருப்திகரமாக முடியும்வரைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்களின் கட்டுப்பணத்தை இச்சபை பிணைப்பணமாக வைத்திருக்கும்.

கொங்கிறீட் கம்பங்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களுக்கான கேள்விப்பத்திரங்களில், பொருட்கள் யாழ்ப்பாணம் வந்துசேர்வதற்கான போக்குவரத்துச் செலவை சேர்த்துக் கணக்கிடக்கூடாது.

எந்தக் கேள்வி விளம்பரத்தையாவது அல்லது கேள்வி விளம்பரத்தின் எப பகுதியையாவது ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ இச்சபைக்குபூரண அதிகாரம் உண்டு.

ஏ. எச். ஏ. சமி
மாநகரசபை ஆணையாளர்,
மாநகரசபைமண்டபம்,
யாழ்ப்பாணம்,
17-12-64 1236

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டு P/652 இலக்கபிசிவிடல் வழக்கின் தீர்வைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1965ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ந் திகதி சனிக்கிழமை (9-1-1965) பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**காணி விபரம்**

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளைப்பற்று, பாலை இறை, காங்கேசன்துறை பட்டின சபை நிலயத்திற்குச் சமீபத்தில் கீரிமலை ரோட்டு அருகாண்மையிலும் உள்ள "வண்டிப்பின்னையான் காடும் மாங்காடும்" நில. பர. 23, குழி 13. இதற்கு எல்லை: கிழக்கு 14 அடி ஒழுங்கையும், சுந்தையா பரம்சோதியும், Dr. தில்லையம்பலமும், மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு கடல், மேற்கு பொன்னு செல்லத்துரையும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு கீரிமலை ரோட்டு.

க. ஐயாறு
Chartered Surveyor
& Commissioner.

மேல்விலாசம்:
K. AYARU
Chartered Surveyor
13. Nachchimarkovil Road
Jaffna. 1282

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் செளக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவரும், பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் கடமை யாற்றுபவருமாகிய திரு. க. வேலுப்பிள்ளையின் தந்தையார் கந்தையா என்பவர் 28-12-64 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு 28-13-64 காலை எள்ளங்குளம் மயானத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்றன. 1856

## கேள்வி விளம்பரம்
## ஆட்டிறைச்சிக்கடை (1965-1967)

**சங்கானைப் பட்டினசபை**

மேற்படி ஆட்டிறைச்சிக் கடைக்கான கேள்விப்பத்திரங்கள் சங்கானைப் பட்டின விசேட ஆணையாளரால் 29-12-64ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் ரூபா 50/- பாதுகாப்பு இருப்புப்பணமாகவும், ரூபா 5/- கேள்விப்பத்திர விலையாகவும் கட்டியதன் பேரில் 28-12-64ம் திகதிவரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தம் 1965ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து மூன்று வருடங்களுக்குச் செய்துகொள்ளப்படலாம். ஏனைய விபரங்களை பட்டினசபைக் காரியாலயத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

சி. சி. மாணிக்கவாசகர்
விசேட ஆணையாளர்,
சங்கானைப் பட்டினம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்
சங்கானை, 22-12-1964.
1238

## மனேஜர் தேவை

**பூநகரி, மட்டுவில்நாடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை ஸ்தாபனம்**

1. வயது — 25 தொடக்கம் 35 வரை.
2. தராதரம் - J. S. C. கூட்டுறவுத் தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
3. சம்பளம், காவல்உட்பட சகல படிகளுடன் ரூபா 100/- வழங்கப்படும்.
4. பிணை-ரொக்கம் ரூ. 1000/- ஆதனப்பிணை ரூ. 2000/-

விண்ணப்ப முடிவு திகதி 2-1-65.

சி. சதாசிவம்,
காரியதரிசி,
ம. ப. நோ. கூ. ச.
1235

## வரி விளம்பரம்

**தேவை**

யாழ்ப்பாணத்திலுள்ள நெசவு நிலயத்திற்கு நெசவில் தேர்ச்சிபெற்றவர்களும், நெசவில் பயிற்சி பெற விரும்புவோர்களும் (பெண்மணிகள் மட்டும்) தேவை. உடன் நேரில் விண்ணப்பிக்கவும் உணவு, தங்குமிட வசதிகள் அளிக்கப்படும்.

கைலாசபிள்ளையார் நெசவுத் தொழிற்சாலை, 327, நாவலர் வீதி (வைமன் ரோட் சந்தி)
1352

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம், மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர்
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**தேவை**

வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு ஒரு பரிசாரகரும், சைவமும் தேவை. சேர விரும்புவோர் மனேஜரை தை மாதம் 15-ம் திகதிக்கு முன் நேரில் சந்திக்கவும். ம. செல்லத்துரை, மனேஜர், துன்னாலை தெற்கு, கரவெட்டி.
1354

**வாடகைக்கு**

குழாய்த் தண்ணீர், மின்சார வசதியுடன் ஐந்து அறை வீடு. 1-1-65 தொடக்கம் வாடகைக்குக் கொடுக்கப்படும். செ. சிவசிங்கம், 'சிவ பவனம்', 23. செட்டித்தெரு லேன், நல்லூர். 1355

# இராமேஸ்வரத்தில் கடல் கொந்தளிப்பு; பலர் பலி

மதுரை, டிச. 24

இராமேஸ்வரத்தில் நேற்றிரவு ஏற்பட்ட கடல்கொந்தளிப்புக் காரணமாக பலர் மாண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரம்-இராமநாதபுரம் பகுதி துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் தனுஷ்கோடி இராமநாதபுரம் ரயில்சேவை தடைப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமானப்படைடகோடா விமானமூலம் உணவு விநியோகிக்கப்படுகிறது.

இராமேஸ்வரத்துடன் தொடர்பு ரயில்பாதை அடித்துச் செல்லப்பட்டது. நிலைமையைப் பரிசீலனை செய்யும் பொருட்டு உயர் அதிகாரிகள் தனுஷ்கோடி சென்றிருக்கின்றனர்.

100 மைல் வேகத்தில் அடித்த புயல் காரணமாக மன்னாரும் வடகிழக்கு இலங்கையும் பாதிக்கப்பட்டது. திருக்கோணமலை, சீனக்குடா ஆகிய இடங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இலங்கை கடற்படை ரோந்துப்படகு ஒன்று மூழ்கிவிட்டது.

## சூ. யோசனையை வில்ஸன் நிராகரித்தார்

லண்டன் டிச. 24

அணு ஆயுதங்களைத் தடை செய்வதுபற்றி உலகத்தலைவர்களின் மகாநாடு ஒன்று நடத்தப்படவேண்டுமென்ற சீனப் பிரதமர் சூ-என்-லாயின் யோசனையை பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் நிராகரித்தார்.

இதற்கிடையில் அல்ஜீரியரில் நடைபெறவிருக்கும் ஆசிய — ஆபிரிக்க மகாநாட்டில் அணு ஆயுதங்களை உற்பத்தி செயய வேண்டாம் என சீனாவை வற்புறுத்தும் எந்த முயற்சியையும் ஜப்பான் ஆதரிக்கும் என டோக்கியோவில் அறிவிக்கப்பட்டது.

## ரயில் விபத்து ஒருவர் பலி

மதுரை, டிச. 24

மதுரைக்கும் திருச்சிக்குமிடையே திருவனந்தபுரம்எக்ஸ்பிரஸ தடம்புரண்டதால் எஞ்ஜினும் 4 பெட்டிகளும் கவிழ்ந்துவிட்டன. ஒருவர் பலியானார். 19 பேருக்குக் காயம், படுகாயமடைந்த 6 பேர் மதுரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## 12-ம் முறையும் தோல்வி

ரோமாபுரி, டிச. 24

இத்தாலிய ஜனாதிபதி தெரிவுக்கு 12-வது முறையாக நடைபெற்ற வாக்கெடுப்பும் தோல்வியுற்றது.

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள அலுமாரிகள், ஷோகேசுகள் மற்றும் கடைக்குத்தேவையான சில்லறைத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. காலை 10-7 மணிவரை நேரில் பார்வையிடலாம். 137 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1353

**விற்பனைக்கு**

B S A. பன்ரம் சுப்பர் (Bantan Super) 4 ஸ்ரீ மோட்டார் சயிக்கிள் விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் 252, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 1345

நாயன்மார்கட்டு (7-ம் வட்டாரம் முனிசிப்பல்) அம்பாள் வீதியில் நாலேமுக்கால் பரப்பு தென்னந்தோட்டம் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. சி. காசிலிங்கம், அம்பாள்வீதி நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். 1351

## பூட்டோ மாஸ்கோ செல்வார்

ராவல்பிண்டி, டிச. 24

சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிக்கோவின் அழைப்பை ஏற்று, பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ மாஸ்கோ செல்லவிருக்கிறார்.

## காங்கிரசை முறியடிக்க கம்யூனிஸ்ட் திட்டம்

பம்பாய், டிச. 24

பம்பாயில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மகாநாடு 16 அம்ச செயல் திட்டம் ஒன்றை வெளியிட்டிருக்கிறது. காங்கிரசின் தனி ஆட்சியை முறித்து எல்லா முற்போக்கு கட்சிகளையும் கொண்ட அரசாங்கம் ஒன்றை அமைப்பதே நோக்கம் என்ற அம்சமும் செயல் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது.

**ராஜா சினிமா**
(சுழிபுரம்)
கல்யாணகுமார்-தேவிகா
நடிக்கும்
**நெஞ்சம் மறப்பதில்லை**

REGAL — JAFFNA
NOW SHOWING
CLIFFORD EVANS
OLIIVER REED
in
CURSE OF THE
WERE WOLF
(EHSTMAN COLOr)

**ஸ்ரீ மனோகரா**
(யாழ்ப்பாணம்) போன் 485
மனோகர்-பண்டரிபாய்
நடித்த
**புனிதவதி**

## பாகிஸ்தானில் தேர்தல் மோதல்கள்

ராவல்பிண்டி, டிச. 24

பாகிஸ்தானில் தேர்தல் முடிந்து ஒரு வாரத்தில் முடிவுகள் அறிவிக்கப்படுமென தேர்தல் கமிஷன் அறிவித்திருக்கிறது.

கிழக்கு பாகிஸ்தான் கவர்னர் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் ஜனாதிபதி தேர்தலின் போது சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படுமென்றும், துருப்புக்களும், பொலிசும் உஷார்ப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானில் நேற்று மிஸ் ஜின்னா ஆதரவாளர்களுக்கும், அயூப் ஆதரவாளர்களுக்குமிடையே பல இடங்களில் கைகலப்பு ஏற்பட்டது.

## தென் வியட்னும்

சைகோன், டிச. 24

ஜெனரல்மின் உட்பட 9 ராணுவ ஜெனரல்களை ஓய்வுபெறுமாறு கேட்கப்பட்டுள்ளதாக தென் வியட்னும் அதிபர் அறிவித்திருக்கிறார்.

அதே சமயம் அதிபரின் கோரிக்கைக்கிணங்க கைது செய்யப்பட்டிருக்கும் உயர் தேசியசபையின் 5 அங்கத்தினர்களை விடுதலை செய்ய பிரதம சேனாதிபதி ஜெனரல் கான் இணங்கியிருக்கிறார். தென் வியட்னும் தலைவர்கள் தங்கள் சொந்த தகராறுகளைக் கைவிட்டு கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்புக்கெதிரான இயக்கத்தில் கவனம் செலுத்த வேண்டுமென அமெரிக்கவெளிநாட்டு மந்திரி ரஸ்க் கேட்டுக்கொண்டார்.

தென் வியட்னுமில் சிவில் அதிகாரிகளுக்கும் ராணுவ அதிகாரிகளுக்குமிடையே ஒற்றுமை ஏற்படவேண்டும் என்றும், தென்கிழக்காசியாவில் சக்திவாய்ந்த அண்டை நாடு தலையிடு செய்வதைத் தடுப்பதே அமெரிக்காவின் கொள்கையென்றும் அவர் மேலும் கூறினார்.

**மகத்தான ஆரம்பம்**
கிங்ஸ்லி — பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
மற்றும் 4 திரைகளில்
நடிகர்திலகம்
**சிவாஜிகணேசன்**
கொடைவள்ளல் கர்ணனாக நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
**கர்ணன்**

**4-வது மகத்தான வாரம்!**
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
**பட்டினத்தார்**
சங்கீதம்: ஜி ராமநாதன் — டைரக்ஷன் கே. சோமு

# வவனியா மாவட்டத்தில் புயல் விளைத்த கொடுமை

## குடும்பமேபலி; கால்நடைகள்மரணம்; வீடுகள் நாசம்; மரங்கள் அழிவு

வவனியா, வியாழன்

செவ்வாய்க்கிழமை இரவு வீசிய சூருவளிக்கு வவனியாவிலிருந்து சுமார் 15 மைல் தூரத்தில் உள்ள பாவற்குளத்தில் 10 பேர் மாண்டனர். வவனியா மாவட்டத்தில் சுமார் 15 பேர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. புயல் விளைவித்த சேதத்தில் வவனியா மாவட்டம் சோகக் காடாகக் காட்சியளிக்கின்றது. வீடுகள் முற்ருகச் சேதமடைந்துள்ளன. 2500 வீடுகள்பலத்த சேதத்துக்குள்ளாகின.

(2-ம் பக்கம் பார்க்க)

# டெலிபோன் தொடர்புகள் இன்னும் சீராகவில்லை

### யாழ்ப்பாணப் பகுதியில் லட்ச ரூபா நஷ்டம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

செவ்வாய்க்கிழமை இரவு வீசிய கடும்புயல் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இவை சீரடைந்து பழைய நிலைக்கு வருவதற்கு சுமார் ஒரு வார காலமாகலாம் எனவும், யாழ்ப்பாணப் பகுதியில் மட்டும் சுமார் ஒரு லட்சம் ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு,வவனியா மன்னர், அநுராதபுரம் ஆகிய வெளியூர்த் தொடர்புகள் முற்ருகசீர்குலைந்துள்ளதாக தபால் பகுதியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார். அவசரத் தந்திகள் வானொலித் தொலைபேசி மூலம் அனுப்பப்படுகின்றன. யாழ்ப்பாண குடாநாட்டின் பல ஊர்களுக்கும் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

# பரந்தன் ரசாயன தொழிற்சாலைக்குச் சேதம்

பரந்தன், புதன்

நேற்றிரவு வீசிய பெரும் புயலினுல் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை பெருத்த சேதத்திற்குள்ளாகிவிட்டது. தொழிற்சாலையிலுள்ள 'குவாட்டர்ஸ்' கூரைகள் எலலாம் காற்றினுல் அப்புறப்படுத்தப்பட்டதனுல் சுமார் 50 குடும்பங்களுக்கு மேல் பாதுகாப்பான இடத்தைத் தேடி ஓடவேண்டியநிலை ஏற்பட்டன. யந்திரப் பகுதிகள் அதிகம் சேதமடைந்துவிட்டதால் இன்னும் சில வாரங்களுக்கு யந்திரங்கள் இயங்கமாட்டாதென கூறப்படுகிறது. பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் இதுவரை மதிப்பிடவில்லை. ஆனுல் இதுவரை ஏற்பட்டிராத பெரும் நஷ்டமெனக் கருதப்படுகிறது.

## நடேசபிள்ளை போட்டியிடுவார்?

நல்லூர், வியாழன்

காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட முன்னுள் காங்கேசன் துறை எம். பி.யும் செனட்டருமான திரு. சு. நடேசபிள்ளை இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்போது தேர்தலில் போட்டியிடுவார்களென எதிர்பார்க்கப்படும் திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன், வி. காராளசிங்கம் ஆகியோர் செனட்டர் நடேசபிள்ளை போட்டியிடும் பட்சத்தில் விட்டுக்கொடுக்க முன்வர உடன்பாடு தெரிவித்துள்ளார்களென்னத் தெரிகிறது.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிமுதல் 8 மணிவரை அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கச் சமயப் பிரசாரசபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் பிரசங்கங்கள் நடைபெறவிருக்கிறது.

நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபம்- ஆசிரியர் திரு. க. முருகேசு 'திருவெம்பாவையும் அவனருள் இயக்கமும்'; வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்- ஆசிரியர் திரு. க. தம்பாபிள்ளை 'எங்கெழிலென் ஞாயிறெமக்கு' நாயன்மார்க்கட்டு ஸ்ரீ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்- ஆசிரியர் திரு. ப. கணபதிப்பிள்ளை - 'ஆலய வழிபாடும் அடியார் கடமையும்'; நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயம்- திரு. சி. தம்பிஐயா 'விரதங்களின் மகத்துவம்'.

## மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சென்ற மாதாந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் குற்றப் பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கனகசிங்கத்தின் சேவையைப் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உதவி மேயர் திரு. கே. வி. தெய்வேந்திரம் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

(இச்செய்தி முன்னர் தவருக வெளிவந்தமைக்காக வருந்துகிறேம். ஆ-ர்.)

## மீனவர்களுக்கு உதவ தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கடல் சார்ந்து வாழும் மக்களின் நல அபிவிருத்திச் சங்கத்தின் 24-வது வருடாந்தக் கூட்டம் அண்மையில் கொழும்பில் தலைவர் திரு. எம். ராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசியின் அறிக்கையில் சங்கம் செய்துவரும் சேவை பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இச்சங்கத்தை அகில இலங்கை நல அபிவிருத்திச் சங்கமாக மாற்றுவது குறித்து ஆராய உபகமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. இயந்திரப்படகு வைத்திருக்கும் மீனவர்களுக்கு உதிரிப்பாகங்களை சங்கமே விநியோகித்து உதவவேண்டுமெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: ஏ. ஆர். எம். ராஜசிங்கம், உபதலைவர்கள் திருவாளர்கள் ரெக்ஸ பிலிப், பிலிப் யேக்கப், பென் சி. நாஸ, செயலாளர்: திரு. ஏ. பி. அந்தோனிப்பிள்ளை, துணைச் செயலாளர்: திரு. எல். மனுவேற்பிள்ளை, பொருளாளர்: திரு. ஈ. ஏணஸண்ட். என்மர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## நெல்லியடியில்

உடுப்பிட்டி, புதன்

செவ்வாய்க்கிழமை மாலை ஆரம்பித்த பலமான காற்றும் தூறல் மழையும் சில மணி நேரங்களில் திடீரென பேய்க்காற்ருகவும் பலமான மழையாகவும் மாறிவிட்டன. இரவு முழுவதும் அடித்த இப் பேய்க் காற்றினுல் இப்பகுதியில் பல சேதங்கள் விளைந்துள்ளன. சில வீடுகளின் ஓடுகள் காற்றின் வேகத்திஞல் சிதறிப் பறந்தன, நெல்லியடியில் சில வீடுகளின் கூரைகளில் இருந்த பனையோலைகள் மாயமாய் மறைந்து விட்டன. வீதிகளெங்கும் முறிந்த மரங்களும், வாழைகளுமாக ஒரே சோலை விழுந்து காணப்படுகிறது. மழையில்லையே என்று ஏங்கியிருந்த விவசாயிகள் இரவு முழுவதும் அடித்த இப்பேய் காற்ருலும் மழையாலும் கவலை அடைந்துள்ளனர்.

## பாப்பரசர் கிறிஸ்மஸ் செய்தி

வத்திக்கான், டிச. 24

கிறிஸ்மஸை முன்னிட்டு எல்லா நாட்டு மக்களுக்கும் எல்லா மதத்தினருக்கும் பாப்பரசர் விடுத்துள்ள செய்தியில் உலக சமாதானம், மனித சகோதரத்துவம் ஆகியவற்றுக்காகப் பாடுபடும்படி கேட்டுக்கொண்டிருக்கிருர்.

வத்திக்கான் வாஞெலி மூலம் அவர் விடுத்த செய்தியில் ஆயுதபரிகரணத்தை வற்புறுத்திஞர்.

ராணுவச் செலவில் ஒருபகுதியை அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு உதவவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## விசேஷ விமான சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி

சமீபத்தில் வீசிய புயல் காரணமாக ரயில்சேவை தடைப்பட்டதால் தூர இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகளுக்கு உதவுமுகமாக ஒரு விசேஷ விமான சேவையை எயர் சிலோன் நேற்று நடத்தியது. ஆவ்ரோ 748 எனும் விமானம் நேற்று பிற்பகல் சுமார் 2 மணிக்கு கொழும்பிலிருந்து பிரயாணிகளை ஏற்றி வந்துபின்னர் 3 மணிக்கு இங்கிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச்சென்றது.

## உடனடி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைரக்டர் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம், வவனியா, அநுராதபுரம் ஆகிய இடங்களுக்குத் தலா பத்தாயிரம் ரூபாயும் மட்டக்களப்புப் பகுதிக்கு ஐயாயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### விமானமூலம் உணவுப் பார்சல்

பதவியாவில் புயலினுல் பாதிக்கப்பட்டு பலஇடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ள மக்களுக் நேற்று விமானமூலம் உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டன.

திருக்கோணமலையில் புயலினுலும் கடல் கொந்தளிப்பினுலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் அளிக்கும் வேலைகளைக் கவனிப்பதற்கு சமூகசேவை இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் உத்தியோகத்தர்கள் சிலரும் அனுப்பப்பட்டுள்ளனர்.

### ரயில் சேவை

கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கும், மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களுக்கும் ரயில்சேவை வழமை போல் நடைபெறத் தொடங்கியுள்ளது. தலைமன்ஞர் ரயில் போக்குவரத்துச் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## சேத விபரங்கள்

### சுழிபுரம்

சுழிபுரப் பகுதியில் பனை மரங்கள் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட மரங்கள் விழுந்து கிடக்கின்றன.

### நாவற்குழி

வீதிகளில் தென்னை, பனை முறிந்து விழுந்ததால் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது.

### கொடிகாமம்

கொடிகாமம் சந்திக்கு அருகேயுள்ள நான்கு தேநீர் கடைகளின் கூரைகள் காற்றினுல் தூக்கி வீசப்பட்டன.

சங்தைக்குள் வரி அறவிட போட்டிருக்குப் 'செட்'டுகள் முற்ருக சேதமடைந்து விட்டன. வழக்கமாக அதிகாலை கூடும் கொடிகாமம் சந்தை புதன்கிழமை காலை 10 மணிக்கு பின்பே கூடியது. தென்னை, பனை மரங்கள் வீதிகளிலும் புகையிரதப் பாதைகளிலும் விழுந்து கிடந்தன. வாகனப்போக்குவரத்து தடைபட்டது.

### மீசாலை

பிரதான வீதியில் மரங்கள் வேரோடு சரிந்து விட்டதால் வாகனப போக்குவரத்து முற்ருக தடைப்பட்டது. வீடுகளில் தென்னை, பனை, பலா முருங்கை முறிந்து விழுந்து விட்டன. சில வீடுகளில் கால்நடைகள் மாண்டன.

### பளளிவாசல் தேவாலய கூரைகள்

சின்னப் பள்ளிவாசலில் பெரிய குளத்துக்கு முன்னுள்ள தங்கு மடத்துக்கு மேல் தகரத்தினுல் போடப்பட்டிருந்த கூரை கோப்பிசத்துடன் 25 யாருக்கு அப்பால் அப்படியே தூக்கி வீசப்பட்டிருக்கிறது.

நாவாந்துறை கத்தோலிக்க தேவாலயத்தின் கூரை (அஸ்பெட்டஸ்ஷீட்) நொருங்கி தரையில் கிடக்கின்றன. புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஓட்டுக் கூரையும் நொருங்கியுள்ளது.

பீச் ரோட்டில் சில குடிசைகள் சரிந்து விழுந்துள்ளன

## தெ. மலேஷியாவில் ஊரடங்கு

கோலாலம்பூர், டிச. 24

தெற்கு மலேஷியாவில் 36 மணி நேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. 25 இந்தோனேஷியர்கள் அங்கு ஊடுருவல் செய்ததைத் தொடர்ந்து அரசாங்க துருப்புகள் அவர்களைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

## திருமலையில் அதிக சேதம்

கொழும்பு, வியாழன்

இலங்கையில் வீசிய கடும் சூருவளியினுல் திருக்கோணமலைதான் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குதான் அதிகமான அளவில் பொருள் சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டிருக்கிறதாம். திருக்கோணமலையுடனுன தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன. விமானம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது.

மன்னுரிலும் இதேமாதிரி போக்குவரத்து, தொடர்புகள் சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது,

## இலக்கிய கலாநிதி பட்டம்

நல்லூர், வியாழன்

சைவசித்தாந்த கலாநிதி திரு. சு. நடேசபிள்ளைக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் 'இலக்கியக் கலாநிதி' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்துள்ளது.

வழக்கறிஞர் திரு. எச். வி. பெரேராவுக்கு 'சட்டக் கலாநிதி' என்னும் பட்டத்தினையும் வழங்கிக் கௌரவித்தது.

பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளச் சென்றுள்ள திரு. சு. நடேசபிள்ளை யாழ்ப்பாணம் திரும்பும் போது அவருக்கு வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

## இராமேஸ்வரத்தில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்பட்டுள்ளன. மழை காரணமாக சென்னை- திருவனந்தபுரம் புகையிரதம் விபத்துக்குள்ளாகியதால் ஒருவர் உயிர் துறந்தார்; 81 பேர் படுகாயமுற்றனர். இன்னெரு புகையிரத விபத்து நடைபெற்றதாகவும் அதில் உயிர்ச் சேதம் எதுவும் நிகழவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரம் தீவை நாட்டின் மற்றப்பகுதிகளுடன் இணைக்கும் பிரதான புகையிரதப் பாதையும் அள்ளப்பட்டு விட்டது.

## ஐ. நா.வுக்கு கிறிஸ்மஸ் விடுமுறை

நியுயோர்க், டிச. 24

ஐ. நா. பொதுச்சபை கிறிஸ்மஸை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.